(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மின்சக்தித் தீர்வை (செல்திறன் ஆக்குதல்) மசோதா.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மின்சக்தித் தீர்வை (செல்திறன் ஆக்குதல்) மசோதாவை இப்பேரவை முன் கொண்டு வரவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் மேன்மைமிகு கவர்னர் அவர்கள் இசைவைத் தெரிவித்து இருக்கிறார்கள். எனவே, இம்மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்த மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்கள்.

(6) அரசினர் மசோதா

தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மின்சக்தித் தீர்வை (செல்திறன் ஆக்குதல்) மசோதா.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மின்சக்தித் தீர்வை (செல்திறன் ஆக்குதல்) மசோதாவை இப் பேரவைக்கு அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இம்மசோதாவை இம்மா மன்றத்தின் முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இம்மசோதா அறி முகப்படுத்தப்பட்டிருக்கிறது.

7: தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1970-71 ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கைமீது விவாதம்: தொடர்ச்சி

திரு. பு. செ. முத்துசெல்வன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நேற்றைய தினம் நம்முடைய மின்சார வாரிய நிதி நிலை அறிக்கை மீது பேசிக்கொண்டு இருந்தபோது, மாநில நில வள வங்கியின் மூலமாக ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்ற கூட்டுறவு பாசன கழகத்திற்கு மின் வசதி அளிப்பதற்கும் இந்த மின்சார வாரியம் வழி வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அதைத் தொடர்ந்து. மற்ற இடங்களில் இருக்கிற மின்சார கம்பெனிகள் எல்லாம், முன்பு தமிழகத்தில் 8 மின்சார தனியார் நிறுவனங்கள் இருந்தன. அதில் நாம் 3 மின்சார தனியார் நிறுவனங்களை ஏற்று நடத்திக்கொண்டு இருக்கிறோம். இன்றும் 4 தனியார் நிறுவனங்கள் அப்படியே இருந்து கொண்டு இருப்பதால், அந்த தனியார் நிறுவனங்களிலிருந்து மின்சார பெறுவது என்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. அவர்க ளிடத்தில் சென்று முறையிடுகிறபோது, சொன்னால் அதற்காக ஒரு ஊருக்கு ஒரு லட்சம் ரூபாய் செலவாகிறது என்று சொன்னால் அந்த ஒரு லட்ச ரூபாய்க்கு கடன் வழங்க வேண்டுமென்று அச் சுறுத்துகிறார்கள். அதற்குக் காரணம் கேட்டால், எங்களுடைய மின்